[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளியூர் என்பது கொசஸ்தலை ஆற்றை ஒட்டி இருக்கக்கூடிய கிராமம். மிகப் பெரிய அளவில் விவசாயத்தை சார்ந்திருக்கக்கூடிய அந்தக் கிராமத்தில் 40 ஆண்டுக் காலமாக கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையானது சிதிலமடைந்து இப்போது பொதுப் பணித் துறையினால் தகுதியற்றது என்று சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையில் ரூ.16 கோடிக்கு கால்நடை மருந்தகங்கள், கட்டடங்கள் கட்டித் தரப்படும் என அறிவித்திருக்கிறார்கள். அதில் வெள்ளியூர் கிராமத்தில் ஒரு மருந்தகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இடத்தைத் துறையின்மூலம் ஆய்வு செய்து, புதிதாக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற இடத்தில், அந்தக் கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

இலவச மின் இணைப்பு

***59172—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 10]

தருமபுரி மாவட்டத்தில் பூந்தோட்ட மின் இணைப்பு பெற்ற விவசாயிகளின் மின் இணைப்பை இலவச மின் இணைப்பாக மாற்றித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டத்தில் பூந்தோட்ட இணைப்பைப் பெற்ற 3,098 விவசாயிகளின் மின் இணைப்புகள் விவசாய இலவச மின் இணைப்பாக மாற்றப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நாட்டுக்கே சோறுபோடும் கடவுள் தான் விவசாயி. அவர்கள் முன்னேற்றம் அடைய இலவச மின்சாரத்தை வழங்கியவர் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை அடுத்து, ஆண்டு வருகின்ற அனைத்து அரசுகளும் தொடர்ந்து இலவச மின்சாரத்தை வழங்கி வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் ஒன்றரை இலட்சம் இலவச மின் இணைப்புகளை விவசாயிகளுக்குக் கொடுத்துள்ளார். அவற்றில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் அதிகமாக 13,555 விவசாயிகள் இலவச மின்சாரத்தைப் பெற்றுள்ளனர். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மின் வாரிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தருமபுரி மாவட்டத்தில் பூந்தோட்ட service *தோட்டக்கலைத் துறை 3*A*1 இணைப்பைப் பெற்றவர்கள் மட்டும் 9,600 விவசாயிகள். அவர்கள் நிறைய பேர் பூந்தோட்ட விவசாயத்தில் நஷ்டம் தான் அடைகிறார்கள். அதனால் மின் இணைப்பிற்கு அவர்களால் பணம் கட்ட முடியாததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்*

விவசாயத்திற்குத் தனி பட்ஜெட் அறிவித்ததுபோல், பூந்தோட்ட விவசாயிகளுடைய வாழ்வாதாரம் முன்னேற்றமடைய தமிழகம் முழுவதும் உள்ள 9,600 பூந்தோட்ட விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தோட்ட மின் இணைப்புப் பெற்ற விவசாயிகளில் 2013 ஆம் ஆண்டு தொடங்கி 2021 ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகளில் 6,918 இணைப்புகளே சாதாரண இலவச மின் இணைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஆண்டுகளில் 10,864 பூந்தோட்ட மின் இணைப்புப் பெற்ற விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பாக மாற்றி ஒரு வரலாற்றுச் சாதனையை மின் வாரியம் நிகழ்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதியில் பதிவு மூப்பு அடிப்படையில் வருகின்ற ஆண்டுகளில் எந்தெந்த மின் இணைப்புகள் அந்த வரிசையில் வருகின்றதோ, அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் விவசாய இணைப்புகளுக்காகக் காத்திருக்கும் விவசாயிகள் இருபத்து ஆறாயிரம் பேர் நமது தருமபுரி மாவட்டத்தில் உள்ளனர். அருகிலுள்ள கர்நாடக மாநிலத்தில் விவசாயிகள் மின் இணைப்புக்கு விண்ணப்பித்த உடனே 15 நாட்களில் அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதுபோல, தருமபுரி மாவட்டம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு இலவச

2023 ஏப்ரல் 10]

மின்சாரத்தை உடனே வழங்குமாறு கேட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி), தோட்டக்கலை மற்றும் பூந்தோட்ட service *3A1 மின் இணைப்பைப் பெற்ற விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், விவசாயிகளுக்கு சுய நிதித் திட்டம்,* SFS *திட்டத்தின்கீழ் அரசாணை எண் 350-ன்கீழ் அல்லது தட்கல் திட்டத்தின்கீழ் விவசாய மின் இணைப்பு வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய நிதி திட்டத்தில் பதிவு செய்து காத்திருப்போருக்கு பதிவு மூப்பு அடிப்படையில் மட்டுமே மின் இணைப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 10 ஆண்டுகள் பதிவு செய்து காத்திருந்தோருக்கு இந்த இரண்டே ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலவச மின் இணைப்பை வழங்கி, ஒரு வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல 38 மாவட்டங்களில் ஒன்றரை இலட்சம் விவசாயிகளில் அதிக அளவில் மின் இணைப்புப் பெற்ற மாவட்டமாக, தருமபுரி மாவட்டம் திகழ்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக ஒன்றரை இலட்சம் இணைப்பில் 5,862 விவசாயிகள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய தொகுதிகளில் இலவச மின் இணைப்பைப் பெற்று பயனடைந்திருக்கின்றார்கள். எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் பதிவு செய்து காத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படிப்படியாக நிறைவேற்றும் வகையில் வரக்கூடிய ஆண்டுகளிலும் அதற்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

செவிலியர் குடியிருப்பு

***7179—திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், செம்மிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய செவிலியர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் செம்மிபாளையம் பிரதான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அது பிரதான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இருப்பதால், செவிலியர் குடியிருப்பின் அவசியம் கருதி, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, கடந்த 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பத்தி எண் 35-ல் குறிப்பிட்டுள்ளபடி, தேசிய நல வாழ்வுக் குழும நிதியிலிருந்து ரூபாய் 22 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டில், செவிலியர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்*